தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல்பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in

No.TNTEU/R/DR-I/Circular/2020/203 நாள்: 04.12.2020

முனைவர். வை.பாலகிருஷ்ணன், பி.எச்.டி,
பதிவாளர் (பொ)

பெறுதல்

முதல்வர்கள்
அனைத்து இணைவுப்பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: TNTEU - இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - 2020 – 2021 ஆம் கல்வியாண்டு – B.Ed/B.Ed (Spl.) பட்ட வகுப்பில் - இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு – பள்ளிகளில் இணையவழியில் நடைபெறும் கற்பித்தல் பயிற்சியினை (Teaching Practice) - முதலாம் ஆண்டு தேர்வு தொடங்கும் நாளிலிருந்து முடியும் நாள்வரை இடை நிறுத்தம் செய்தல் - சார்பு.

பார்வை:
1. தமிழக உயர்க்கல்வித்துறை ஆணை, நாள்: 04.11.2020.
2. Examination Committee minutes, dated: 06.11.2020
3. TNTEU/R/Eligibility/2020/95, dated:18.08.2020.
4. Examination Committee minutes, dated: 20.11.2020 & 03.12.2020

*****

மேற்காண் பார்வை 1, 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப்பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் 2020-2021 –ஆம் கல்வியாண்டில் B.Ed/B.Ed (Spl.) பட்ட வகுப்பில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு NCTE–யின் விதிப்படி, 16 வாரங்கள் பள்ளிகளுக்கு சென்று கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால், COVID–19 ஊரடங்கின் காரணமாக பள்ளிகள் திறக்கப்படாததால் கல்லூரியில் பயிலும் இரண்டாம் ஆண்டு B.Ed/B.Ed (Spl.) மாணாக்கர்களுக்கு, அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள அரசு/அரசு உதவி பெறும் அல்லது மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் முறையாக அனுமதிப்பெற்று கடந்த 30.11.2020 முதல் பள்ளிகள் திறக்கும் வரை இணையவழியிலும், பள்ளிகள் திறந்தபின் பள்ளிகளுக்கு நேரில் சென்றும், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், மேற்காண் பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழக அரசின் ஆணைப்படி, இரண்டாம் ஆண்டு B.Ed/B.Ed (Spl.) பட்ட வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு, முதலாம் ஆண்டு தேர்வுகள் வருகின்ற டிசம்பர் 2வது வாரம் முதல் தொடங்க உள்ளதால் தேர்வு தொடங்கும் நாளிலிருந்து, தேர்வு முடியும் நாள் வரை கற்றல், கற்பித்தல் பயிற்சியில் இடை நிறுத்தம் செய்து அந்த நாட்களை பின் வரும் மாதங்களில் ஈடு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கலாகிறது.

பதிவாளர் (பொ)